# EASTERN UNIVERSITY, SRI LANKA
## FACULTY OF COMMERCE AND MANAGEMENT
### External Degree Programme
### Part 11 Examination in Bachelor of Economics – 2009/2010 (Proper/Repeat)
### EXEOC 3043 Business Planning

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக  நேரம்: 03 மணித்தியாலங்கள்

01. **திரு றொபினின் முகாமைத்துவமும் சுயதொழில் முயற்சியும்**

திரு றொபின் என்பவர் கடந்த ஆறு ஆண்டுகளாக 2000 முதல் 2006 வரை பொலனறுவையில் அமைக்கப்பட்டுள்ள பாரிய அரிசியாலை ஒன்றில் முகாமையாளராக பணி புரிந்து வந்தார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வியாபார நிர்வாக துறையில் பட்டப்பின்படிப்பு டிப்லோமாவை பூர்த்தி செய்திருந்தார். 2004 ஆம் ஆண்டு அக்கம்பனியினால் சிறந்த முகாமையாளராக தெரிவு செய்யப்பட்டு கௌரவிக்கப்பட்டுமிருந்தார். சிறந்த நிர்வாக ஆற்றல், சக ஊழியர்களுக்கிடையிலான உறவு முறை, தொழில் பாதுகாப்பு, ஊழியர் நலன் புரி நடவடிக்கைகள், மற்றும் சிறப்பான மேற்பார்வை தொடர்பாக கூடிய அக்கறை செலுத்தியதன் காரணமாகவும் நிறுவனத்தின் தடையின்றிய செயற்பாட்டிற்கு பங்களிப்பு செய்தமைக்காகவும் அவருக்கு அவ்விருது வழங்கப்பட்டிருந்தது.

திரு றொபின் முகாமையாளராக பதவியேற்பு செய்ததன் பின்னர் நிறுவனத்தின் உற்பத்தி செயற்பாட்டை மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்தார். இதன் அடிப்படையில் நிறுவனத்தின் வெளியீடானது அதற்கான கேள்வியினை பூர்த்தி செய்ய போதுமானதாக அமையாது இருப்பதை அவரால் அவதானிக்க முடிந்தது. இதனை நிவர்த்தி செய்வதற்கான வழிவகைகளை ஆய்வு செய்து சில முக்கியமான முடிவுகளை மேற்கொண்டார்.

- நிறுவனத்தின் இடப்பரப்பினை விஸ்தரிப்பு செய்தல்.
- தற்போது பாவணையிலுள்ள இயந்திரங்களின் இயலளவினை அதிகரித்தல் அல்லது மாற்றி அமைத்தல்
- புதிய நுட்பங்களை புகுத்துதல்
- நிறுவனத்தினுடைய வெளியீட்டுக்கான கேள்வியினை தடையின்றி வழங்கும் பொருட்டு கையிருப்பினை தொடர்ந்து பேணுதலும் அதற்கு பொருத்தமான பிரத்தியேகமான இடம் ஒன்றினை அமைத்தலும்.

எனினும் இவற்றை பூரணபடுத்துவதற்கான நிதித்திட்டமிடலானது சற்று உயர்வாக காணப்பட்டமையினால் இதனை குறைப்பதற்கான சாத்தியமான காரணிகளை ஆராய்ந்து செலவுகளை திட்டமிடப்பட்டவற்றில் இருந்து 25% ஆல் குறைக்கப்பட்டு செயற்றிட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்செயற்பாட்டின் காரணமாக நிறுவனத்தின் இலாபமானது அதற்கு அடுத்த ஆண்டில் அதற்கு முந்திய வருட இலாபத்தை விட 15% ஆல் அதிகரித்தது.

ஏவ்வாறாயினும் திரு றொபின் என்பவர் தனது முகாமையாளர் பதவியில் திருப்தியற்றவராக காணப்பட்டார். ஆரம்ப காலத்திலிருந்து தான் ஒரு சுய தொழில் முயற்சியாளராக வர வேண்டும் என்ற எண்ணம் அவரது மனதில் ஆழமாக பதிந்திருந்தது. ஆத்துடன் அவரது மனைவியும் பிள்ளைகளும் அவரது சொந்த இடமான மட்டக்களப்பில் வசித்து வருகின்றார்கள். திரு றொபின் தனது குடும்பத்துடன் சேர்ந்து வாழ வேண்டிய அவசியமும் ஏற்பட்டது. இவ்வாறான சூழ்நிலையில் தனது சுய தொழில் முயற்சி எண்ணம் வலுப்பெறவே தான் தற்போது வகிக்கும் பதவியை விட்டு விட தீர்மானித்தார்.

தனது முகாமையாளர் பதவிகாலத்தின் போது பெற்ற அனுபவம், ஆற்றல் என்பவற்றை கொண்டு சுயமாக தனது சொந்த பிரதேசத்தில் சிறியளவில் ஒரு அரிசியாலையை நிறுவுவதற்கு முடிவுசெய்தார். ஏனெனில் அவர் தெரிவு செய்த இடம் வேளாண்மையை பிரதான தொழிலாக கொண்டிருந்ததினாலும் ஏற்கனவே தான் ஒரு பெரிய அரிசியாலையில் பணிபுரிந்து வருகின்றமையும் அவர் இத்தொழிலை தெரிவு செய்வதற்கு பிரதான காரணிகளாக அமைந்தது.

திரு றொபின் 2006 இல் தனது பதவியை இராஜினாமா செய்து தனது சுய தொழில் முயற்சியை தொடங்குவதில் முழு மூச்சாக செயற்பட்டார். முதல் கட்டமாக அப்பிரதேசத்தில் அரிசிக்கான கேள்வியை மதிப்பீடு செய்தார். அவரது கணிப்பின் படி மாதம் ஒன்றுக்கு 150 மெற்றிக்தொன் அரிசி தேவையாக இருந்தது. ஆத்துடன் அத்தொழிற்சாலையை நிறுவுவதற்கான திட்டமிடல்களையும் மேற்கொண்டு தேவையான முன்னேற்பாடுகளை பூர்த்தி செய்தார்.

நிதித்திட்டமிடலின் பிரகாரம் அத்தொழிற்சாலையை நிறுவுவதற்கு ரூபா 15 இலட்சம் மூலதனம் தேவையாக இருந்தது. இதனை ஈடுசெய்யும் பொருட்டு தனது சொந்த வருமானத்தில் இருந்து சேகரித்து வந்த ஒரு பகுதியையும் அவரது தந்தை, திரு றொபின் கணக்கில் வைப்பு செய்திருந்த பணத்தை மீளப் பெறுவதுடன் மிகுதிப் பணத்தை மக்கள் வங்கியில் சிறு தொழில் முயற்சியாளருக்கான கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்குமான ஏற்பாடுகளையும் செய்திருந்தார். அத்துடன் தொழிற்சாலைக்கான அமைவிடத்திற்கு தனது சொந்த காணி ஒன்றினை பயன்படுத்துவதற்கும் முடிவு செய்தார். நாள் ஒன்றிற்கு 5000 கிலோகிராம் அரிசியை வெளியீடாக பெற்றுக்கொள்ளும் வகையில் இயந்திர உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டு உற்பத்திக்கு பயன்படுத்துவதற்காகவும் தீர்மானிக்கப்பட்டது.

2007இன் ஆரம்பம் முதல் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டது. திட்டமிட்டத்தைப் போன்று நாள் ஒன்றிற்கு 5000 கிலோகிராம் அரிசி உற்பத்தி செய்யப்பட்டு சந்தைப்படுத்தப்பட்டது. அத்துடன் 50 கிலோகிராம் (1மூடை) அரிசி கொள்வனவு செய்வதற்கு ஏற்படும் செலவை விட 5% குறைத்துக் கொடுக்கக்கூடியதாகவும் இருந்தது.

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY

இம்முயற்ச்சியானது அப்பிரதேசத்தின் உடனடி தேவையினை பூர்த்தி செய்யக்கூடியவகையில் அமையப் பெற்றதால் வாடிக்கையாளர் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது. அடுத்து வந்த இரு ஆண்டுகளில் அவரது இலாபமானது மொத்த நிலையான செலவில் 20% ஆக காணப்பட்டது.

இரண்டு ஆண்டுகளுக்கு பின்னர் 2008 இல் திரு றொபின் மேலும் தனது வெளியீட்டை நாளொன்றிற்கு 500 கிலோகிராம் மேலதிக அலகுகளால் அதிகரிக்க திட்டமிட்டார் அதன்படி வெளியீட்டின் அளவும் அதிகரிக்கப்பட்டது. ஆனால் அக்காலப்பகுதியில் அவர் ஒரு பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டார். அதாவது அப்பிரதேச குடியிருப்பாளர்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களின் எதிர்பை அவர் எதிர் நோக்க வேண்டி இருந்தது ஏனெனில் இவ்வுற்பத்தியினால் வெளியேற்றப்படுகின்ற உமி, தவிடு போன்றவைகள் நீர் நிலைகளை மாசுபடுத்துவதோடு துர்நாற்றத்தை ஏற்படுத்துதல் மேலும் தொடர்ச்சியான இயந்திர பாவனை மூலமான அதிகளவான சத்தம் அன்றாடம் சுற்றுப்பிரதேச மக்களுக்கு சிரமமானதாகவும் காணப்படுகின்றது. இதனால் அப்பிரதேச மக்கள் குறித்த தொழிற்சாலையை வேறு பிரதேசத்துக்கு மாற்றுமாறு திரு றொபின் க்கு அழுத்தம் கொடுக்க தொடங்கினர் ஆனால் திரு றொபின் தொழிற்சாலை வேறு பிரதேசத்திற்கு இடமாற்றம் செய்வது பொருத்தமற்றது என் கருதினார்.

இந்நிலையில் தனது தொழிற்சாலைக்கு எதிரான அழுத்தங்கள் அதிகரிக்கவே மாற்று வழிகள் எதுவும் கிடைக்காத நிலையில் அவர் தனது உற்பத்தியின் அளவை குறைத்துக்கொள்வதாக தெரிவித்து தனது வெளியீட்டின் அளவை நாளொன்றுக்கு 3000 கிலோகிராமாக குறைத்து கொண்டார். இச்செயற்பாடு காரணமாக அடுத்த மூன்று மாத காலத்திற்கான அவரது நிகர இலாபத்தில் பாரிய வீழ்ச்சி காணப்பட்டது. இக்காலப்பகுதியில் அதிகரித்த மின் கட்டணம் மற்றும் ஏனைய நிலையான செலவுகள் என்பவற்றினால் அவரது முதலீட்டுக்கு போதுமான இலாபத்தை அவரால் உழைக்க முடியாது போனது.

**வினாக்கள்**

01. திரு றொபின் ஒரு சிறந்த முயற்சியாளர் என்று எண்ணுகின்றீரா? அவ்வாறாயின் அவரிடம் காணப்படும் விசேட குணாம்சங்களை விபரிக்குக. **(07புள்ளிகள்)**

02. திரு றொபின் தனது தொழிற்சாலைக்கு தெரிவு செய்த இடம் அதற்கு பொருத்தமானது என்று நீர் கருதுகின்றீரா? விமர்சிக்குக. **(07புள்ளிகள்)**

03. திரு றொபின் ஒரு சிறப்பான முகாமையாளராக இருந்தபோதிலும் தனது சுய தொழில் முயற்சியில் அவர் தோல்வியடைந்து விட்டார். இக்கூற்றை ஏற்றுக்கொள்கிறீரா? விளக்குக. **(07புள்ளிகள்)**

04. திரு றொபின் தனது தொழிசாலையை மீண்டும் இலாபம் தரக்கூடிய வகையிலும் அவரது தற்போதைய பிரச்சினையிலிருந்து மீட்சி பெறுவதற்கு நீர் எவ்வகையான பொருத்தமான ஆலோசனைகளை திரு றொபினுக்கு முன்வைக்க முடியும். **(07புள்ளிகள்)**

**(மொத்தம் 28 புள்ளிகள்)**

02. **"இலங்கையினுடைய பொருளாதார வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கும் சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில் முயற்சிகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக காணப்படுகின்றன".**

(i) சிறு தொழில் முயற்சி என்றால் என்ன? இலங்கையில் சிறு தொழில் முயற்சியின் விசாலத்தினை **மதிப்பிடுவதற்கு** கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் யாவை? **(06 புள்ளிகள்)**

(ii) வெற்றிகரமான சிறு தொழில் முயற்சியொன்றின் விசேட குணாதிசயங்களை எடுத்துக் காட்டுக. **(06 புள்ளிகள்)**

(iii) இலங்கையில் பொருளாதார வளர்ச்சிக்கு சிறுதொழில் முயற்சிகள் எவ்வழிகளில் பங்களிப்பு செய்கின்றன? **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 18 புள்ளிகள்)**

LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

03. **"ஒரு தொழில் முயற்சியாளர் புதிதாக சிறுதொழில் முயற்சியொன்றை ஆரம்பிப்பதற்கு அல்லது ஏற்கனவே இயங்குகின்ற சிறு தொழில் முயற்சியொன்றினை விரிவாக்கம் செய்வதற்கு நிதியே பிரதான இடம் வகிக்கின்றது"**

(i) ஒரு சிறு தொழில் முயற்சியொன்றின் பிரதான நிதியீட்ட மூலங்கள் யாவை? **(06 புள்ளிகள்)**

(ii) இலங்கை சிறுதொழில் முயற்சிகளுக்கு அரசதுறை வணிக வங்கிகளின் மூலம் வழங்கப்படுகின்ற பிரதான வகையான கடன்களை குறிப்பிட்டு அவற்றை சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iii) இலங்கையில் அரச மற்றும் தனியார்துறை வணிக வங்கிகளிடமிருந்து கடன்களை பெறும்போது தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வங்கியாளர்கள் எதிர்நோக்குகின்ற கஷ்டங்கள் யாவை? **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 18 புள்ளிகள்)**

04 **"தொழில் திட்டமானது புதிய தொழில் முயற்சியாளரது தொழில் யோசனைகளையும் அவர்கள் சேகரித்த தகவல்களையும் யதார்த்தமாக வரிசைப்படுத்தி திட்டவட்டமான கணிப்பீடுகளையும் மேற்கொள்வதனைக் குறிக்கின்றது".**

(i) ஒரு சிறந்த தொழில் திட்டமானது எவ்வழிகளில் புதிய தொழில் முயற்சியாளர்களுக்கு அனுகூலமாக அமைகின்றது? **(06 புள்ளிகள்)**

(ii) ஒரு சிறந்த தொழில் திட்டத்தில் உள்ள முக்கியமான பகுதிகளை சுருக்கமாக விளக்குக. **(06 புள்ளிகள்)**

(iii) ஒரு தொழில் திட்டத்தின் சுருக்கம் (Executive summary) என்றால் என்ன? **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 18 புள்ளிகள்)**

05 **"எந்தவொரு சிறுதொழில் முயற்சியின் வெற்றிக்கு இருப்பு கட்டுப்பாடு ,கணக்கு பதிவியல், கிரயவியல், சந்தைப்படுத்தல் மற்றும் தொழிலைதிட்டமிடல் என்பன அவசியமாகும் ".**

(i) இருப்பு கட்டுப்பாட்டின் நன்மையை குறிப்பிடுக? **(06 புள்ளிகள்)**

(ii) தொழில் முயற்சிக்கு கணக்கு பதிவியலின் அவசியத்தை குறிப்பிடுக **(06 புள்ளிகள்)**

(iii) வணிக எண்ணக்கருவுக்கும் வணிக வாய்ப்புக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக? **(06 புள்ளிகள்)**

**(மொத்தம் 18 புள்ளிகள்)**